**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS.94/2022**

09.09.2025

**DW-1**

**பி.வா.சா.1. ராமதாஸ், த/பெ.காசிநாதன், அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கு சொத்தானது ஆதியிலிருந்து எனது அப்பா காசிநாதனுக்கு சொந்தமானது என்றால் - சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதச சொத்துக்கள் சம்மந்தமாக நான், எனது சகோதரர்களும் 1974 ல் ஒரு பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம் என்றால் - சரிதான். அந்த பாகக்பிரிவினையானது நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 985/1974 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்சொன்ன பாகப்பிரிவினை ஆவணம் தான் என்றால் - சரிதான். மேற்சொன்ன ஆவணத்தில் எனது தந்தைக்கு சொந்தமான சொத்துககள் A, B, C என 3 அட்டவணையாக பிரிக்கப்பட்டு ஏஅட்டவணை கணேசனுக்கும் பி அட்டவணை எனக்கும், சி அட்டவணை கலியபெருமாளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் - சரிதான். வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்பதற்கு எந்த ஆவணமும் கிடையாது என்றால் - சரிதான். எனது தம்பி கலியபெருமாள் பாகப்பிரிவினை ஏற்பட்டு 4 ஆண்டுகள் கழித்து இறந்துவிட்டார். கலியபெருமாள் வாரிசுகள் எனது தம்பி இறந்தபிறகு எத்தனை ஆண்டுகள் கழித்து மன்னார்குடி வந்தார்கள் என்றால் - 2000 ம் ஆண்டு வந்தார்கள். அதுவரைக்கும் வாதிகள் எங்களது வீட்டில்தான் இருந்தார்கள் என்றால் - சரிதான். காளாஞ்சிமேட்டு கிராமத்தில் கலியபெருமாளுக்கு வீடு ஒதுக்கப்பட்டது என்றால் - மனைக்கட்டு ஒதுக்கப்பட்டது. வீடு ஒதுக்கப்படவில்லை. நான் சொல்வதுபோன்று கலியபெருமாள் வாரிசுகள் எங்கள் வீட்டில் தங்கவில்லை என்றாலும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைக்கட்டில் தான் இருந்தார்கள் என்றால - சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள ஆவணங்களை தவிர்த்து வழக்கு சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என காட்டுவதற்கு வேறு ஆவணங்கள் இல்லை என்றால் - இல்லை. வழக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினை பத்திரத்தில் சி அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் சி அட்டவணை சொத்தில் மொத்தம் 22 அயிட்ட சொத்துக்கள் கலியபெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் - சரிதான். மேற்சொன்ன 22 அயிட்ட சொத்துக்களில் ஒருசில சர்வே நம்பர்களில் மட்டும் என் பெயர் உள்ளது என்றால் - சரிதான். என் பெயரில் உள்ள வழக்கு சொத்துக்களில் உள்ள பட்டாவில் எனது பெயரை நீக்குவதற்காக 3 ம் வாதி நீடாமங்கலம் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் - தெரியாது. வழக்கு சொத்தில் வேலி கொட்டகை போடும்போது எனக்கும் வாதிகளுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது என்றால் - இல்லை. வேலி, கொட்டகை அமைக்கும்போது நான் தடுத்தேன் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் தரிசாக தான் உள்ளது என்றால் - சரிதான். என் கன்ட்ரோலில் உள்ள சொத்துக்கள் தரிசாக கிடக்கிறது. நான் சட்டவிரோதமாக வாதிகளின் அனுமதி இல்லாமல் கடந்த 2022 ம் ஆண்டியிலிருந்து

அனுபவம் செய்து வருகிறேன் என்றால் - சரியல்ல. 1974 ல் பாகப்பிரிவினை காலத்திலிருந்து என் அனுபவத்தில் உள்ளது. எனக்கு படிக்க தெரியுமா என்றால் - தெரியும். என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில், அவரவருக்கு கிடைத்த பாகத்தினை அவரவர் அனுபவத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் - சரிதான். 1974 லிருந்து 2022 ம் ஆண்டு வரை வழக்கிடை சொத்துக்கள் எனது அனுபவத்தில் தான் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. வழக்கு சொத்துக்கள 1974 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் 1 ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாரான கலியபெருமாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும் அந்த சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் - சரியல்ல. வழக்கு சொத்து கலியபெருமாள் இறந்தபிறகு அவரது வாரிசுகளுக்கு கிடைக்கப்பெற்று அவர்கள் ஆண்டு அனுபவம் செய்து வந்தார்கள் என்றாலும் நான் வழக்கு சொத்தை மலிவான விலைக்கு கேட்டேன் என்றாலும் அதற்கு வாதிகள் உடன்படாததால் வாதிகளுக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்களை சட்ட விரோதமாக கடந்த 2022 ம் ஆண்டு முதல் அபகரித்து வைத்துக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன்எ ன்றால் - சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து நான் 3 ம் தரப்பினர் என்றாலும் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் - சரியல்ல. வழக்கு சொத்தல் 1974 முதல் எனது அனுபவத்தில் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்டகிறேன்எ ன்றாலும் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.